**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 33/2024**

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய விஸ்வநாதன் **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, L.L.M.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 16.03.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | விஸ்வநாதன் | | |
| Father /Husband Name | : | காசிநாதன் | Court | : |
| Village | : | காழியப்பநல்லூர் | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 54/2026 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 02.02.2022 | புஷ்பராணியின் இறப்பு சான்றிதழின் கணினி நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 25.03.2024 | 1ம் வாதி மயிலாடுதுறை மாவட்ட தொடக்க கல்வி அலுவலருக்கு அனுப்பிய கடிதத்தின் அலுவலக நகல் **வாசாஆ 2**ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 26.05.2022 | வாதி 2 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் 9 நபர்களுக்கு அனுப்பிய உவிமுச பிரிவு 80 ன் கீழ் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வாசாஆ 3**ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | -- | மேற்படி அறிவிப்பை 2 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டைகள் |

| | | |
|---|---|---|
| | | (எண்ணிக்கை–3) **வாசாஆ 4**ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5. | –– | வாதி 3ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கடிதத்தின் உண்மை நகல் **வாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6. | –– | மேற்படி அறிவிப்பை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **வாசாஆ 6**ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7. | –– | வாதி செம்பனார்கோவில் வட்டார கல்வி அலுவலர் மூலமாக மாவட்ட தொடக்க கல்வி அலுவலருக்கு அனுப்பிய கடிதத்தின் உண்மை நகல் **வாசாஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8. | –– | மேற்படி கடிதத்தை வட்டார கல்வி அலுவலர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **வாசாஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**